செங்கரும்பாரஞ் சொரிவில்லைநாதனைச் சேர்ந்தணையாக
கொங்கரும்பாரத் தனத்தியைவாட்டுங் கொடியமதி
மங்கரும்பாரதை விட்டேகாநல்ல வளமுடையீர்
இங்கரும்பாரவி வந்திடச்சேவ லிசைத்திலென்னே.

(இ-ள்.) செங்கரும்பு ஆரம்சொரி வில்லைநாதனைசேர்ந்தணையா-சிவந்தகரும்புகள் முத்துக்களை யுதிர்க்கின்றவயல்களசூழ்ந்த வில்லையென்னுமபதியி லெழுந்தருளிய சிவபெருமானைப்பொருந்தியணையாத, கொங்கரும்பு ஆர் அத்தனத்தியை வாட்டும கொடியமதி - கொங்குமுலைககளையொத்த வந்தக்கொங்கைகளையுடைய பெண்ணை வாட்டுகின்ற கொடுமையாகிய சந்திரனானது, மங்கு அரும் பாரதைவிட்டு ஏக நல்லவளமுடையீர்-கெடுதலில்லாத பூமியைவிட்டுப்போக நலல வழகையுடைய பாங்கிகளே, இங்குரவி அருமபார வந்திட சேவல் இசைத்தில் என் - இவவிடததில் சூரியனுதித்தவரச் சேவலானது கொக்கரித்ததில்லை யாதுகாரணம், ஏ-அசை. (௨௯)

இலங்கர்வேலனை யீன்றவன்வாழ்வில்லை யோர்வரையோ
தலங்கரத்தல் செய்யாதுரைப்பா யொருதையலுக்கோ
வுலங்கழும்மெழு கொத்துளம்வாடியிங கொல்கின்றாய்
தொலைங்கழ்ந்தற்றவ முறறேய்நிற்கேது துயருறவே.

(இ-ள்.) இலங்கர் வேலனை யீன்றவன் வாழ்வில்லையோர் வரை யோதலே-இலைபோன்ற வேலாயுதத்தையுடைய முருககடவுளைப் பெற்றவனாகிய சிவபெருமான் வாழுகின்ற வில்லையென்னுந் தலத்திலிராநின்ற வழகியமலையினிடத்துச் சென்றதை, நீ கரத்தல் செய்யாது உரைப்பாய் ஒரு தையலுக்கோ-நீ மறைக்காமற் சொல்லுவா யொரு பெணணுக்காகவோ, உலங்கழும்மெழுகொத்து உளம வாடியிங்கு ஒல்கி நின்றாய்-உலைக்களத்தி லிருக்கின்ற மெழுகைப்போல மனது வாட்டமுற் றிவ்விடதிற்றுவண்டுநின்றாய், தொலை நீகழ் நற்றவம் உற்றோய் நிற்கு ஏது துயருறவு - பூர்வத்தில் செய்துள்ள நல்ல தவத்தையுடையவனே யுனக்குத் துன் பஞ்சம்பவித்ததேது, ஏ-அசை. (௩௦)

(இ-ள்.) சீரலைவாய் அமர் செந்தலை பெற்றவன் - திருச்சீரலைவாயென்னும்பதியி லெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளை யீன்றவன், செம் முத்தம் மிஞ்சு ஈர அலை வாய் கடல் சூழ் புவி போற்ற திகழும் வில்லை சீர் அலை வாய்ப்ப சோரான் - செவ்விதாகிய முத்தங்கள் மிஞ்சாநின்ற குளிர்ந்த வலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த வுலகத்தார் துதிக்க விளங்காநின்ற வில்லைப்பதியில் சிறப்பானது கெடுதலில்லாமல் பொருந்திய கடவுளது, சேவடி சிந்தை வைத்தேன் சீர் அல் ஐ வாய் நமன் அஞ்சுவன் சேட்டையும் தேடிலன் - திருவடியை மனதில்வைத்திருக்கின்றேன் சதாயுதத்தையுமிருண்ட நிறத்தையு மழகாகவாய்ந்த வந்தகனுனவனை பயப்படுவன் மூதேவியுந் தேடாள், எ-அசை. (கூரு)

தேடுந்தவத்தர்க்கு மெட்டாகதிவந்தி சேரவந்த
ஈடுந்தவத்தற்குத் தாவெனக்கேட்டவர் நாளுமன்றில்
ஆடுந்தவத்தர் குராண்மரமார்வில்லை யணணலன்றிப்
பாடுந்தவத்தற்குத் தொண்டனென்றேதப் பணிந்திலனே.

(இ-ள்.) தேடும் தவத்தர்க்கும் எட்டா கதி வந்தி சேர - தேடுகின்ற தபசிகளுக்கு மெட்டக்கூடாத மோக்கத்தை மலடியானவளடைய, அந்நாள் து தவ தற்கு தாவென கேட்டவர் நாளும் மன்றில் ஆடுந்து அ அத்தா - அக்காலத்திலுணவாகிய பிட்டமுதை மிகவுந் தனக்குக்கொடுவென்று கேட்ட கடவுள் நாடோறும் பொன்னம்பலத்தில் திருத்தஞ்செய்யாநின்ற அந்த சிவபெருமான், குரால்மரம் ஆர் வில்லை அண்ணலன்றி பாடும் த அத்தற்கு தொண்டனென்றோத பணிந்திலன் - குரால் விருட்சங்கள்பொருந்திய வில்லைப்பதியி லெழுந்தருளிய கடவுளையல்லாமல் வழிந்துபோகும் பிரமனது தந்தையாகிய திருமாலுக்கு அடியானென்று சொல்லும்படி யவனைப் பணியமாட்டேன், எ-அசை. (கசு)

பணிவேங்கைகண்டிட்ட மன்றுணடஞ்செய்த பண்ணவகல்
அணிவேங்கைசூழ்வில்லை வாழ்பரவைம்பொறி யாலழிந்து
திணிவேங்கையன்றனை சூன்கரும்புட்குருள்செய்ததுபோல்
தணிவேங்கைநீங்க வளித்திவோவென் நீயாகிலியே.

(இ-ள்.) பணி, வேங்கை கண்டிட மன்றுள் நடஞ்செய்த பண்ணவ - பதஞ்சலியும் வியாக்கிரபாதருந் தரிசிக்கக் கன

## கோகிலாம்பிகை மாலை.

இராபடியெறகொண் டிருபதோடீரா
றியலாமவளர்த்ததா யேயென்
பொருமிடியசுற்றிப் பெருகிய சுகத்திற்
பொருந்தியவருளுநா ளுளதோ
வருமுயலகன்மேற் றிருவடியூன்றி
மாநடம்புரிந்தகா மீசர்
அருமைசேரிடத்தின் மருவிவாழ்பவளே
யணிவில்லைக்கோகிலாம் பிகையே. (௭)

குயின்மொழிமடவார் மயலினிற்சிக்கிக்
குலையுமென்மனதினை தரிய
வெயின்மிகுவனசம் பயிலடியுன்னி
வினையொழிந்திருந்திட வருளாய்
மயிலிவாகுகனைச் செயிரறவளித்த
வள்ளல்காமீசர்பா கத்தார்
அயினிகர்விழியாய் கைலையையொக்கு
மணிவில்லைக்கோகிலாம பிகையே. (௮)

மூடரைக்கும்ப முனியெனவுரைத்து
முதுக்குறைவின்றியே திரிவேன்
தேடருஞ்சடைகின் முடியநாதன்
றேவியேயென்றுதா னுன்னைப்
பாடிநல்லருளைப் பெறுகிலேனிந்தப்
பாவியேனுய்வதெவ் வகையோ
ஆடரவணிகா மீசர்பாகமதா
ரணிவில்லைககோகிலாம பிகையே. (௯)

சரவணபவசண் முககுகவயிலைத்
தரித்திடுகார்த்திகை குமர
பரவடியர்களுக் கருள்செயுமுருக
வெனவுனற்சுதன்றனைப் பரிவாய்க்
கரமலர்குவித்துப் பாடிடவருளாய்
கதிர்மதிநதியிள மறுகோ
டரவையும்புனைகா மீசர்பாகத்தா
ரணிவில்லைக்கோகிலாம் பிகையே. (௧௦)

அறையுங்கணை யுந்துமுகுந்தனின்-மருமந்திக ழுந்திருவென்
மலர்மங்கையு வந்தருளுந்திரு-மருகோனே, [றிடு

மலைதங்கிய வன்குறமங்கையை
நலமிஞ்சபு ணர்ந்தனில்வந்ததி
மயல்கொண்டுமெ ணந்துமகிழ்ந்தருள்
முருகோனே,

வனசங்களு மஞ்சளுமிஞ்சியும்-விளைகின்றநி லங்கணிறைந்
[துள
வளமொன்றிய வில்லையிலங்கிய-குகவேளே. (௪)

அறிவுமங்க லுற்று - முனம்வருந்தி மெத்த
வருமையென்றி ழைத்த - வினையாலே,

அறையுமந்த ரத்தின் - பிறையைவென்ற நெற்றி
யழகமைந்து முற்று - மதின்மேலே,

நறியமஞ்ச ளிட்ட - வடிவுகண்டு சொற்ப
நலமின்மங்கை கத்து - செயலாலே,

நவிலுகின்ற பித்த - விருமல்கொண்டு சத்தி
நலியுமென்ற னுக்கு - னருளாறு,

மறவிகந்த சுத்த - வவிடதங்கொ டுத்து
மணியமாந்தி சைக்கு - மணி மேவா,

மலர்களென்று ரைக்கும் - பதயுகஞ்சி ரத்து
மனமுவந்து வைத்தெ - னெனையாளாய்,

இறையிருந்த பத்தன் - றுதியுணர்ந்து பச்சைச்
சிகியில்வந்து விட்ட - முருகோனே,

திருமணஞ்சி றக்கப் - புரியும்வில்லை யுற்றுத்
திகழுகின்ற வத்த - குகவேளே. (உ)

சந்தந்தங் கைந்தருவார்நிழல் - குந்தந்தம் பந்தியிலுறாயர்
தந்தந்தந் தந்தனதானென-டமாட,

சங்கும்பம் பம்மென வூதிட-அங்கங்குஞ் சிந்துகள்பா
தங்கும்பொங் கிந்திரனேமுத-லனைவோரும், [டி

